# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 75 பிரசோற்பத்தி தை 27 (10 02 1992) திங்கள்


## 9 ஈ.ரோஸ் எம்.பிகளும் பதவி இழந்தனர்

யாழ் மாவட்டத்துக்கான ஒன்பது ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுயேச்சை உறுப்பினர்களாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர்களின் ஆசனங்கள் தற்போது வெற்றிடமாகவுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

# வடபகுதி இராணுவ நடவடிக்கை; நாட்டையே யுத்தமயமாக்கும்!

## யாழ் விஜயத்தின் பின் பி. பி. ஸி. நிருபர் வெளியிட்ட கருத்து

குடாநாட்டில் எந்த நேரமும் இராணுவம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற மனநிலையே அங்குள்ள மக்களிடம் காணப்படுகிறது. யுத்தத்திற்கான ஆயத்தங்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருப்பதையும் காணமுடிந்தது. இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதே அபூர்வமான மறக்க முடியாத நிகழ்ச்சியாகி விட்டது. படகு, சைக்கிள் என 38 மைல்களைக் கடக்க 8 மணித்தியாலங்கள் பிடித்தன.

அண்மையில் யாழ் நகரில் நடைபெற்ற பேரணியைப் பற்றிக் குறிப்பிட்ட மொறிஸ் யாழ் மக்கள் தமது அவல நிலையை எடுத்துக்கூற இதை நடத்தியதாகத் தெரிவித்தார்.

நீல நிறத்தில் சீருடையணிந்த தமிழ் பொலிஸாரையும் தாம் கண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புலிகளுக்கு மக்கள் ஆதரவில்லை என அரசு கூறிவருகின்ற போதிலும் அது தவறு என்பது நேரில் காணும் போது புலப்படுகிறது.

— 04 ஆம்பக்கம் பார்க்க

## ஓட்டோ-ஸ்கூட்டர் விபத்து மூவர் படுகாயம்

நேற்று பிற்பகல் ஆனைக்கோட்டை மானிப்பாய் வீதியில் ஸ்கூட்டர் - ஓட்டோ வாகன விபத்தில் மூவர் படுகாயமுற்ற நிலையில் யாழ்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### வொய்ஸ் ஒப் அமெரிக்கா

## இரணவில பகுதி மக்கள் புதுமையான போராட்டம்

கத்தோலிக்கக் கிராமமான இரணவிலவில் வொய்ஸ் ஒப் அமெரிக்க அஞ்சல் நிலையம் அமைக்கப்படுவதை எதிர்த்து அப்பகுதி மக்கள் புதுமை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் ஈழக்கொடி பாராளுமன்றத்தில் கேள்வி

கொழும்பில் சுதந்திரதினத்தன்று ஈழம் கொடி பறந்தது தொடர்பாக சுதந்திரக்கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

கொழும்பு பார்க் வீதியில் உள்ள தமிழ்க்குழுவொன்றின்

...04 ஆம் பக்கம் பார்க்க

### கொழும்பு அதிமேற்றிராணியார் அறிக்கை

## தம்மைத்தாமே ஆளும் உரிமை மாகாண சபைகளுக்குத் தேவை

சுதந்திர தினத்தில் அர்த்தமுள்ள செய்தி எதனையும் வெளியிட விரும்பும் எவரும் எமது நாட்டில் இன்று நிலவும் யுத்த நிலையை கவனத்தில் எடுக்காமல் இருக்கமுடியாது.

இவ்வாறு கொழும்பு அதிமேற்றிராணியார் அதிவணக்கத்துக்குரிய நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒரு புறம் பலம் பொருந்திய தமிழ் அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழர்களுக்கென தனி நாடு கோருகின்றனர்.

1948 இல் சுதந்திரம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆனைக்கோட்டை லோறிவிபத்து பெண் ஸ்தலத்தில் பலி

நேற்று மாலை ஆனைக்கோட்டை பகுதியில் இடம்பெற்ற லொறி விபத்தில் பெண் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

ஐந்து பிள்ளைகளின் தாயாரான செல்லத்துரை மகிழம்மா (45) என்ற பிரதாப பெண் திருமண வீட்டு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வடபகுதி பயணிகளுக்கு குளிரூட்டல் வசதியும் கிடைக்குமாம்

கொழும்பு வவுனியா புகையிரதத்தில் குளிரூட்டல் வசதி கொண்ட பெட்டி இணைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று தொடக்கம் குளிரூட்டல் வசதியைக் கொண்ட பெட்டி இணைக்கப்படும் என புகையிரதப் பகுதி அறிவித்துள்ளது.

# கடற்படையினரும் கண்ணிவெடி தேடுகின்றனர்!

யாழ். குடாக்கடலில் இனிமேல் கடற்படைக்கப்பல்கள் பயணம் செய்வதற்கு முன் கடற்பகுதியில் கண்ணிவெடிகள் ஏதும் உண்டா என பரிசோதிக்கப்படும் என கடற்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கென புதிய கண்ணிவெடி அகற்றும் கருவி இப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளனவாம். (18)

## நாடுகடத்தல் சட்டத்தில் இடமில்லை உடன்பாட்டில் வழியுண்டாம்!

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் இந்திய நீதிமன்றத்தில் சரணடையாவிட்டால் அவரைப் பிடித்துக்கொடுக்க சட்டத்தில் வழியுண்டா என இலங்கை வெளியுறவுத் துறையையும் பாதுகாப்புத் துறையையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஆராய்கின்றார்களாம்.

கொழும்பு பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

குற்றவாளிகளை பரஸ்பரம் நாடுகடத்தச் சட்டம் இரு நாடுகளுக்குமிடையே இல்லை ஆனால் 1978 ஆம் ஆண்டு இந்தியா தனது நாடுகடத்தல் சட்டத்தை வர்த்தமானி மூலம் வெளியிட்டு இலங்கைக்கு விரிவுபடுத்திய தாம்

04 ஆம் பக்கம்பார்க்க

## ★ தெற்கில் சம்பவம் 526 படையினர் பலி ஜே. வி. பி. காரணம்

தெற்கில் ஜே.வி.பி. இயக்கத்தினரால் சமீபகாலத்தில் 324 பொலிஸாரும், 202 படையினரும் கொல்லப்பட்டுள்ளதாக 'லங்கா புவத்' செய்தியொன்று தெரிவிக்கிறது.

கொல்லப்பட்ட பொலிஸாரில் 245 பேரும், படையினரில் 148 பேரும் 1989 ஆம் ஆண்டிலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

1987 முதல் 1990 வரையிலான காலப்பகுதியில் ஜே.வி.பி.யினரால் 6150 சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகவும் 'லங்கா புவத்' அறிவிக்கிறது.

## நொச்சிமோட்டை ஷெல் தாக்குதல் அதிர்ச்சியில் ஒருவர் மரணம்

தாண்டிக்குளம் - நொச்சிமோட்டைப்பகுதியை நோக்கி வவுனியா இராணுவத்தினர் நேற்று முன்தினம் பிற்பகல் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது யாழ் நோக்கி வந்துகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் வவுனியாவில் கடமைபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் அதிர்ச்சிக்குள்

...04 ஆம் பக்கம் பார்க்க

## போரை விரும்புபவர்கள் அதன் 'விலையை' ஏற்கட்டும்

நாட்டில் போர் தொடர வேண்டும் என விரும்புபவர்கள் அதற்கான விலையை ஏற்றுக்கொள்ளட்டும் யுத்தத்திற்காக அவர்கள் அதிகரித்த வரிகளை அரசுக்குத்தொடர்ந்து செலுத்த சம்மதமாயின் யுதி

...04 ஆம் பக்கம் பார்க்க

## ஷெல் தாக்குதல்

நேற்றுக் காலை 4-30 மணியிலிருந்து ஒரு மணி நேரம் வரையில் பலாலி முகாமிலிருந்து கட்டுவன் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டன.

# எதிரியே! நீ சாவாய்!

வீரமனமும் வெறிகொண்ட உறுதியும்
திரத் திடத் தோளுங் கொண்டிங்கு
சூரப் புலிகள் சூழ்ந்திருக்கும் மண்ணில்
போர்க் கோலங் கொண்டுவந்தால்—எதிரியே நீ
சாக்கோலங் காண்பாய்; சத்தியமாய்...
தீக்கனலாய் ஆவர்; எம்மிளைஞர் திண்ணமிது!

— கவிஞர் மூ. வே. யோ. வாஞ்சிநாதன்.

# ★ வேதாளம் மீண்டும்...
# திருமலையில் இனிப்புக் கொடுத்து வரவேற்பு!
# வவுனியாவில் உணவின்றி தவிப்பு!!

இந்தியாவிலிருந்து திருமலைத் துறையை வந்தடைந்த அகதிகளுக்கு இனிப்புப் பொட்டலங்கள் வழங்கி வரவேற்பளிக்கப்பட்டது.

ஆனால் அவர்களுக்கு அடுத்தடுத்துக் கிடைத்து வரும் அனுபவங்கள் கசப்பானதாக இருக்கிறது என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களது பாதுகாப்பு நிவாரண உதவிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு உத்தரவாதம் வழங்கியதுடன் உடன் வழங்குதல் மற்றும் உதவிகள் தொடர்பான நீண்ட பட்டியல் ஒன்றையும் வெளியிட்டது.

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக அகதி மக்கள் புலம்ப ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா புகையிரத நிலையத்துக்கு அருகில் பயணிகள் தங்கும் விடுதியில் தற்காலிகமாகத் தங்கியுள்ள அகதிகள் குழந்தைகளுக்குப் பால்மா கரைப்பதற்கு கொதித்த நீரும், தேநீரும் ஏனைய வைத்திய வசதிகளும் அளிக்கப்படுவதில்லை என முறையிட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் இரண்டாவது தொகுதியில் திருமலை வந்து அங்கிருந்து வவுனியா வந்த அகதிகளே அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர் 24 குடும்பங்களைச் சேர்ந்த 94 பேர் இங்குள்ளனர்,

இவர்களது முறைப்பாடு குறித்துக் கருத்து வெளியிட்ட அதிகாரிகள் 'ஒருவருக்கு 3 நேரமும் 15 ரூபா பெறுமதியான உணவு வழங்கவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது, இதனால் தேநீர் வழங்க முடியாதுள்ளது. கொதிநீரையும் அவர்களே தயாரிக்க வேண்டும்' என்றுதெரிவித்தனராம்.

அகதிகள் தமக்களிக்கப்பட்ட உத்தரவாதத்தின் பேரில் தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும்வகையில வாகன வசதிகள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டபோது 'அவ்வாறான உத்தரவு எதுவும் எமக்கு வழங்கப்படவில்லை' என அதிகாரிகள் கையை விரித்தனராம்.

சாதாரணமாக சிறு உதவிகளையே ஒரு சிறிய தொகுதி மக்களுக்கு நிறைவேற்ற முடியாத நிலையில் ஏனைய உத்தரவாதங்களை எவ்வாறு நிறைவேற்றப் போகிறார்கள் என அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

# ஊவாவில் கைதான 40 பேரில் 3 பொலிஸாரும் அடங்குவர்!

இராணுவப் பயிற்சி பெற்றவர்கள என்ற பெயரில் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 பேரில் ஒரு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரும் இரு கான்ஸ்டபிள்களும் அடங்குகின்றனர்.

எஞ்சியோரில் ஐந்து பேர் ஆசிரியர்கள், ஏழுபேர் வர்த்தகர்கள், ஐந்துபேர் மாணவர்கள், ஒருவர் துறைமுக ஊழியர் அத்துடன் காவலில் உள்ளோரில் ஏழு தோட்டத் தொழிலாளர்கள், மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

# 'எக்ஸ்போ' 92 வர்த்தகக் காட்சி நவம்பரில் கொழும்பில்

'எக்ஸ்போ' 92 வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள 'எக்ஸ்போ-92' காட்சியில் 200 காட்சியறைகள் இடம்பெறும்.

சுமார் 1500 வெளிநாட்டு வர்த்தகப் பிரமுகர்கள் இக் காட்சியில் பங்குபற்ற இங்கு வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கல்முனை கடற்பகுதியில் நேற்றுக்காலையும் தாக்குதல்!

பூநகரி கல்முனைப் பகுதியில் இருந்து நேற்றுக்காலை 7 30 மணியளவில் கடற்படையினர் பூவரசந்தீவுப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கலிபர் தாக்குதல் மேற்கொண்டனர்.

அதேவேளை கடலில் இருந்து பீரங்கித்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

அவ்வாலை கிழக்கு கரையோரமாக பீரங்கிக் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. (47)

# 'சகலவிதராக்கிங்கையும் தடுங்கள்' கோரிக்கை!

பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம்

பல்கலைக் கழகங்களில் ராக்கிங் செய்யப்படுவதைத் தடுக்க சட்டமூலம் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் அரசைக் கோரியுள்ளது.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் ராக்கிங் சம்பவங்களால் முதல் வருட மாணவர்கள் மனோதத்துவ ரீதியில் பாதிக்கப்படும் நிலையும் ஏற்படுவதாக இச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதனால் சகலவித ராக்கிங்களும் தடுக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

# அதிபர் சேவையில் உள்ளோருக்கு நியமனக் கடிதங்கள் விரைவில்

01-06-89 அன்று முதல் அதிபர்கள் சேவைக்கு நியமிக்கப்பட்டவர்களுக்குரிய நியமனக் கடிதங்களை உடன் வழங்கவும், தற்காலிக நியமனக் கடிதங்களை வழங்கியவர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கல்விச் சேவைக்குழுச் செயலாளர் சுற்று நிருபம் மூலம் பிரதேசப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார்.

போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட அதிபர்களுக்கும், கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றிய அதிபர்களுக்கும் இணைக்கப்பட்டவர்களுக்கும் இவ்வாறு நிரந்தர நியமனக் கடிதங்களையும், அவர்களது சேவையில் உறுதிப்படுத்துவதற்கான கடிதங்களையும் வழங்க நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளார். (15)

# சட்ட நெறிமுறையை மீறும் தமிழக ஆளுங் கட்சி அரசியல்வாதிகள்!

ராஜீவ்காந்தி கொலை குறித்துத் தமிழக அமைச்சர்களும், ஆளுங்கட்சி அரசியற் பிரமுகர்களும் தாங்களே புலன் விசாரணை அதிகாரிகள்போல் கருத்துத் தெரிவித்து வருவதாகத் தமிழக சஞ்சிகையொன்று குற்றம் சாட்டியுள்ளது.

நீதிமன்றத்தின் முன்பு ஒரு வழக்கு விசாரணையில் இருக்கும்போதும் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகியுள்ள நிலையிலும் குற்றப் பத்திரிகை தாக்கலான பிறகும் செய்திகளை வெளியிடும்போது எந்த அளவு எழுதலாம், எதெல்லாம் உடாது என்று சில கட்டுப்பாடுகள், நெறிமுறைகள் உண்டு,

ராஜீவ் கொலை தொடர்பாகச் சிறப்புப் புலனாய்வுக் குழுவும், தமிழகக் காவற்துறையும் பலரைக் கைது செய்துள்ளன குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டியது அவர்களது கடமை,

நடுவே இந்த விவகாரத்தில் அரசியல்வாதிகள் அவ்வப்போது அறிக்கை விடுவதுதான் முறைகேடாக உள்ளது.

தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, யாரெல்லாம் கைது செய்யப்படவேண்டும் என்று அறிக்கை விடுகிறார்.

அ. தி. மு. க. அமைச்சர் அரங்கநாயகமோ "தி. மு. க. பிரமுகர் சுபபுலட்சுமி ஜெகதீசன் புலிகளிடம் தங்கம் வாங்கினார்" என்று அறிவிக்கிறார்.

இவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் என்ன ஆதாரம் என்று சொல்வதும் கிடையாது.

அப்படி ஆதாரம் வைத்திருந்தால் அதைப் புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைத்து விட்டுச் சத்தம்போடாமலிருப்பது தானே முறை?

இப்போது அமைச்சர் சொல்லி விட்டதற்காக அதையும் ஒரு குற்றமாகச் சேர்த்துக் கொண்டு ஆதாரம் தயாரிக்க வேண்டிய நிலை பொலிஸாருக்கு ஏற்படாதா?

அரசியல்வாதிகளின் அவசரப் பேச்சுக்கள் குழப்பத்தைத்தான் ஏற்படுத்தும் அப்புறம் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்ய முகாந்திரமே இல்லை என்று வக்கில் வீரசேகரன் வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது போன்ற நிலைமைதான் வரும்!

என்று சஞ்சிகை எழுதியுள்ளது,

# செய்தி உலகம்

## ஓய்வூதியத்துக்காக...

பெண்குழந்தை ஒருவரின் தந்தை குழந்தைக்கு 3 வயதாயிருக்கும் போதே இறந்து விட்டார். அவர் ஒரு இராணுவச் சிப்பாய். இராணுவச் சட்டப்படி அப்பிள்ளை திருமணம் செய்யும் வரை அவருக்கு ஒய்வூதியம் வழங்க அரசு தீர்மானித்தது.

ஆனால் சிப்பாயின் மகளோ இறக்கும்வரை, 97 வயது) திருமணமே செய்து கொள்ளவில்லை! இதனால் இறக்கும் வரை தந்தையாரின் ஒய்வூதியம் அவருக்கு கிடைத்து வந்தது.

## சிறுநீரகம்... அபேஸ்

சிங்கப்பூரில் யாராவது விபத்தில் இறந்தால் அவரது சிறுநீரகத்தை எடுத்துக் கொண்டு பிணத்தை உறவினர்களிடம் ஒப்படைத்து விடுகிறது அரசு. பின்பு தேவைப்படும்போது இச் சிறுநீரகம் பயன்படுத்தப்படும். சட்டம் இதற்கு இடமளிக்கிறது.

## துறவியின் கூந்தல்

உலகிலேயே நீளமான கூந்தலை உடைய துறவி ராஜஸ்தானில் வசித்து வருகிறார், ஜெகதாம்பாள் என்ற இவரின் கூந்தலின் நீளம் 21 அடி. 4 அங்குலம். இவருக்கு வயது 74. இவர் நீராடி விட்டு வரும்போதும், உலர விடும்போதும் இவரது சிஷ்யை ஒருவர் கூந்தலைத் தூக்கிப் பிடித்தவண்ணம் நிற்கிறார், (22)

# 4 ஆவது தொகுதி அகதிகள் 15 ஆம் திகதி திருமலை வருவர்!

இந்தியாவிலிருந்து திரும்பி வரும் ஈழத்தமிழ் அகதிகளின் மூன்றாவது தொகுதியினர் நேற்றுக்காலை 8. 30மணிக்கு திருமலையை வந்து சேர்ந்தனர்.

707 பேர் கொண்ட இவர்களில் 192 பேர் அரசாங்க ஊழியர்களாவர் இவர்களை வரவேற்க இலங்கையிலுள்ள சுவீடன் அதிகாரியும் திருமலைக்கு சென்றிருந்தார்.

இவர்கள் தற்சமயம் அகதி முகாம்களில் தங்க விடப்பட்டுள்ளனர். அடுத்த தொகுதி அகதிகள் எதிர்வரும் 15-ம் திகதி வருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# முஸ்லிம்களுக்கென இரண்டு தனிக் கல்விக் கல்லூரிகள்

பாடசாலைகளிலிருந்து வெளியேறும் தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு உதவும் பொருட்டு ஐந்து புதிய கல்விக் கல்லூரிகள் இந்த ஆண்டு முடிவுக்குள் ஆரம்பித்து வைக்கப்படுமென உயர்கல்வி அமைச்சர் ஹமீத் தெரிவித்துள்ளார்.

இதில் மூன்று தமிழர்களுக்காகவும் இரண்டு முஸ்லிம்களுக்காகவும் செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதற் கல்லூரி கொடிகலவில் கடந்த 5-ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டதாகவும் இதில் மலையகத் தமிழர்களுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்துவரும் மூன்று கல்லூரிகளும் அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, வவுனியாவில் ஆரம்பிக்கப்படும் ஐந்தாவது கல்லூரி வடக்கு, கிழக்கு தவிர்ந்து வாழும் முஸ்லிம்களுக்கெனத் தனியாக ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# வவுனியா மாவட்டம் முழுவதற்கும் மின் வசதி கிட்டுமாம்

1993ல் வவுனியா மாவட்டம் முழுவதற்கும் மின்சாரம் வழங்கப்பட்டு விடும் என்று மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் மெர்வின் டி. சில்வா கூறியுள்ளார்

இவ்வருடம் ரூபா 3 கோடியே 30 இலட்சம் செலவில் மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும் என்றும், அடுத்த வருடம் ஆசிய வங்கியின் நிதி உதவியுடன் வவுனியா மாவட்டம் முழுவதற்கும் மின்சார வசதி ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சண்முகம் கணேசலிங்கம் (கண்ணா) என்பவருடைய மூக்குக் கண்ணாடி (பரிசோதித்தது) தனங்கிளப்புச் சந்திக்கும்-மூத்திரைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 02013

# அதிகரிக்கும் தாக்குதல்கள்; ஜேர்மனியிலிருந்து ஆசிய நாட்டவர்கள் வெளியேறுகிறார்கள்!

கிழக்கு, மேற்கு ஜேர்மனிகள் இணைக்கப்பட்டதை அடுத்து அங்கு வாழும் ஆசிய நாட்டவர்கள் மீதான துன்புறுத்தல்கள் வெகுவாக அதிகரித்து விட்டதாக ஜேர்மனியிலிருந்து அண்மையில் நாடு திரும்பிய ஒருவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த பிற தகவல்கள் வருமாறு:-

ஒன்றிணைப்பை அடுத்துக் கிழக்கு ஜேர்மனியிலிருந்து இடம்பெயர்ந்து மேற்கு ஜேர்மனியில் வசிப்பவர்களால் அங்குள்ள பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்திய, இலங்கை நாட்டு மக்கள் தாக்கப்படும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுகின்றன.

## இரவென்றாலே தயக்கம்

இரவில் 6 மணிக்குப் பின்பு வீதியிலோ, பொது இடங்களிலோ ஆசிய நாட்டவர்கள் முன்பு போல் தற்பொழுது சுதந்திரமாக நடமாட முடியாது.

## பெண்களையும் விடுவதாக இல்லை

முன்னர் ஆண்களே தாக்கப்பட்டார்கள், இப்போது பெண்களையும் அவர்கள் விட்டுவிடுவதாக இல்லை.

இரவு வேலை செய்யும் ஆசிய நாட்டவர் தமது கடமை முடிந்ததன் பின்னர் வெளியே செல்ல அஞ்சுகிறார்கள். இதனால் தாம் வேலை செய்யும் இடங்களிலேயே தங்கிவிட்டு விடிந்ததும் வீடு செல்கிறார்கள்.

## ரயில் நிலையங்களில் இரவில் தஞ்சம்

சில வேலைத் தளங்களில் ஆசிய நாட்டவர்கள் வேலை முடிந்ததும் தங்குவதற்கு நிர்வாகம் அனுமதிப்பதில்லை. இதனால் அத்தகைய தொழிற்சாலைகளில் இரவு வேலை செய்யும் ஆசிய நாட்டவர்கள் பூமிக்கடியில் உள்ள ரயில் நிலையங்களில் விடியும் வரை தங்கியிருக்கிறார்கள்.

## ஒப்புதல் வாக்கு கேட்கும் பொலிஸ்

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஜேர்மனியில் ஆசிய நாட்டவர் ஒருவர் ஜேர்மன் தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டால் அல்லது விபத்தில் இறந்தால் அவரது சடலத்தை உறவினரிடம் கொடுப்பதற்குப் பொலிஸார் நிபந்தனை விதிக்கிறார்கள்.

குறித்த நபர் தற்கொலை செய்தார் என அவரது குடும்பத்தினர் ஒப்புதல் வாக்குமூலமளித்தால் மட்டுமே சடலம் அங்கு அவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

## அயல் நாடுகளுக்கு குடி பெயர்வு

இந்த நிலைமைகளினால் விசா பெற்றுப் பல வருடங்களாக ஜேர்மனியில் குடும்பமாகத் தங்கித் தொழில் புரிந்து வந்த பலர் அண்டை நாடுகளுக்கு இடம் பெயரத் தொடங்கிவிட்டனர். (16)

# இந்திய பிரபல தொழில அதிபர் டாடாவுக்கு ஐ. நா. விருது!

சனத்தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்குப் பாடுபட்டமைக்கான ஐக்கியநாடுகள் சபையின் விருது இம்முறை இந்தியாவின் பிரபல கைத்தொழில் அதிபரும், குடும்பத் திட்டமிடல் முன்னோடியுமான திரு. டாடாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதே விருது நியூயோர்க்கிலுள்ள சர்வதேச சனத்தொகைக் கட்டுப்பாட்டுச் சபைக்கும் கிடைத்துள்ளது.

வெற்றியாளர்கள் இருவருக்கும் 12500 டொலர்கள் பரிசுப் பணமாகப் பங்கிட்டு வழங்கப்படவுள்ளது.

# கொழும்பில் விபத்து அதிகரிப்பு; ஜனவரியில் 865 சம்பவம்; 10 பேர் பலி!

கொழும்பு மாநகரப் பகுதியில் சாலை விபத்துக்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் மட்டும் கொழும்பு மாநகர சபைப் பகுதியில் 865 விபத்துக்கள் நடந்துள்ளன. சென்ற ஆண்டு ஜனவரி மாதத்தில் 735 விபத்துக்கள் மட்டுமே இப்பகுதியில் இடம்பெற்றிருந்தன.

கொழும்பு மாநகரில் நாளொன்றுக்கு சராசரியாக 27 வீதி விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

கடந்த ஜனவரி மாதம் கொழும்பில் இடம்பெற்ற விபத்துக்களில் மட்டும் 10 பேர் கொல்லப்பட்டனர்.

# 90 உதவி ஆசிரியர்கள் தெரிவு

சாவகச்சேரி கல்வி அபிவிருத்திக் கழகத்தினால் கோட்டமட்டத்தில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் 90 உதவி ஆசிரியர்கள் தெரிவாகினர்.

இவர்களுக்கான சேவை முன் பயிற்சி நேற்று சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் முடிவடைந்தது. (16)

# இலங்கை வங்கியை அமெரிக்க மயமாக்க முயற்சி? கணக்குப் பார்வைப் பணிகள் அமெரிக்க நிறுவனங்களிடம்

இலங்கை வங்கியை வர்த்தக மயமாக்கும் முயற்சியொன்றில் அரசு மறைமுகமாக ஈடுபட்டு வருவதாகக் கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகையதொரு நோக்கம் கிடையாது என அரசு முன்னர் மறுத்திருந்தாலும் வங்கி புனரமைப்பு என்ற போர்வையில் அதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இப்போது ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இயங்கும் பிரதான இலங்கை வங்கிக் கிளைகளினதும், தலைமை அலுவலகத்தினதும் கணக்குகளை கண்பார்வை செய்யும் பொறுப்பு இம்முறை அமெரிக்க நிறுவனமொன்றான அலன், கமல்த்திறன் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உலக வங்கி இதற்கான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

பிறநாட்டு நிறுவனங்கள் இலங்கை வங்கியின் கணக்குகளைப் பரிசீலனை செய்வது இதுவே முதற்தடவையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள முக்கிய நிறுவனங்கள் சிலவற்றைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளதைக் கருத்தில் கொள்ளும்போது இலங்கையில் 600 க்கும் மேற்பட்ட கிளைகளையும், மொத்த சனத்தொகையில் 75 சதவீதமானோர் தொடர்பைக் கொண்டுள்ளதுமான இவ்வங்கியை அமெரிக்க மயமாக்க முயற்சியெடுக்கப்படுகின்றமை தெளிவாகின்றது என வங்கி வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (16)

# தினமும் 'தமிழோசை' ஒலிக்க லண்டனில் புதிய முயற்சி!

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் பி.பி.ஸி தமிழோசை நிகழ்ச்சிகளை வாரத்தில் ஏழு தினங்களிலும் இடம்பெறச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது தமிழோசை நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக் கிழமைகளில் ஒலிபரப்பாவதில்லை.

அனேகமாக ஏப்ரல் முதல் தமிழோசை நிகழ்ச்சிகள் ஏழு தினங்களும் ஒலிபரப்பாகக் கூடிய நிலை ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை தென்கிழக்காசிய நாடுகளுக்கான பி.பி.ஸி. ஒலிபரப்புக்களை சிற்றலையுடன் மத்திய அலைவரிசையிலும் ஒலிபரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொடுப்பனவு இன்றி பணிபுரியும் கல்வி அலுவலர் விபரம் சேகரிப்பு

கொடுப்பனவு எதுவும் இன்றி கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் கல்வி அதிகாரிகளின் விபரங்களை சேகரித்து அனுப்பி வைக்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சின் சிரேஷ்ட கல்வி அதிபதி சகல கல்விப்பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

இவ்விபரத்தில் இவ்வாறு கடமையாற்றும் கல்வி அதிகாரிகளின் பெயர், அலுவலக முகவரி, இவ் உத்தியோகத்தரின் தரம், முன்னர் கல்வி அதிகாரியாக கடமையாற்றியிருந்தால் அது தொடர்பான கடித விபரம் போன்றவி வரங்கள் கோரப்பட்டுள்ளன. (15)

# நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்கள்

வீட்டினுள் இருந்த விருந்தாளிகளின் ஆரவாரமும், அமளிகளும் ரோட்டுக்குக் கேட்டன.

மூன்று நாட்களுக்கு முன்பு அதே வீட்டில் அழுகுரலும் ரோட்டுக்குக் கேட்டது.

அன்று செத்த வீடு.

இன்று செலவு வீடு.

இறந்த கந்தையா விரும்பி உண்ட சகல பதார்த்தங்களும் படையலுக்குத் தயாராகிக் கொண்டிருந்தன.

உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் வைபவத்தில் கலந்து கொள்ள வந்திருந்தனர்.

விதம் விதமான உணவுகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. சமையல் அறையிலிருந்து வந்த வாசனை பலருக்குப் பசியைக் கிளப்பியது.

"கந்தையாண்ணைக்கு உடும்பிறைச்சியெண்டால் உயிர். வாங்கிக் காச்சடா எண்டனான். வாங்கினானோ தெரியேல்லை" இறைச்சிக் குழம்பின் வாசனையில் லயித்த மீசைக்காரர் ஒருவர் கூறினார். உடும்பிறைச்சியென்றால் இவருக்கு உயிர்.

பக்கத்தில் இருந்தவர் விடவில்லை. "கந்தையாண்ணை ஆமையிறைச்சியைக் கண்டால் விடார், சமைக்கிறாங்களோ தெரியேல்லை" சப்புக்கொட்டினார் இவர். இறைச்சிக் குழம்பு மணம் வீச, பேச்சும் அதைச்சுற்றி சுற்றி வந்தது.

"இறைச்சிக்கறி காச்சுற மாதிரி காச்ச வேணும் கண்டியோ என்ரை ஆச்சி கோழிக்கறி காச்சினா கொடித்துாசிச் சந்தி வரை மணக்கும். தெரியுமே" சொல்லும் போதே அவருக்கு நாக்கில் நீர் வடிந்தது.

பக்கத்து நண்பர் விடவில்லை "கட்டைப் பிராயிலை என்ரை ஆச்சி ஆட்டிறைச்சி காச்சினா கல்வியங்காட்டிலை மணக்கும் முதல் பாலிலை வேகவிடுவா - சா, என்ன ருசி" ஆட்டிறைச்சி சாப்பிட்டமாதிரியே அவர் முகபாவம் இருந்தது.

இந்த இறைச்சி வாசனை அவர்களுக்கு வேறு நினைவையும் கொண்டுவந்தது.

"இப்ப ஒரு இடமும் நல்ல சரக்கு இல்லை. கலக்கிறாங்கள். காலமை அரை அடிச்சனான் அடிச்ச மாதிரியே இல்லை. வெளியே போயிட்டு வருவமே மீசை நபர் கிசுகிசுத்தார்.

மற்றவர் பார்வை குசினிப்பக்கம் சென்றது.

"மனுசி மூழிசிப் பாக்குது வீட்டை வந்து நெருப்பெடுப்பான்; வேண்டாம் விடு" என்றார். வாசலில் சுருண்டு படுத்திருந்த நாய் மேல் மீசைக்காரர் பார்வை சென்றது.

"இந்த நாய் அப்போது தொடக்கம் இதிலை கிடக்குது. நல்ல சாதி நாய் போல இதைத்தான் சங்கிவேசன் நாய் எண்டு சொல்றது" என்றார் மீசை.

"சங்கிவேசன் இல்லையப்பா; அல்சேசன் உன்ரை அரை இப்பவேலை செய்யுது நல்ல சாதியோ இல்லையோ எந்தச் சனி அடிச்சாலும் வயித்திலை ஊதி போடவேணும்" என்றார் மற்றவர்.

அப்போது சாப்பாடு தயார் என்ற அறிவிப்பு வந்தது.

"மச்சம் சாப்பிடுபவை ஒரு பக்கம் மரக்கறி மற்றப் பக்கம்" என ஒரு அறிவிப்பு.

பந்தியில் சாப்பாடு ஆரம்பமானது. அரை அடித்தவர்கள் ரசித்து உண்டனர்.

"நல்ல இறைச்சி ஒரு எலும்பு கூட இல்லை" இது மீசைக்காரர்.

எலும்பைக் கடித்துக் கொண்டிருந்த நண்பர் இவற்றை இலையைப் பார்த்தார்.

"உது சோயா மீற்கறி இறைச்சிக்கறி போட மறந்திட்டாங்கள். தம்பி இங்கை இறைச்சி கொண்டுவா" என்று சத்தம் போட்டார். அவருக்கும் கிடைத்தது.

"சுறாவறை அருமையாயிருக்கு" மீசைக்காரர் புகழ்ந்தார்.

பக்கத்து நண்பர் விடவில்லை "என்ரை ஆச்சி வறை வறுப்பா..." என்று தொடங்கினவர் பரிமாறிக் கொண்டிருந்த மனைவி உற்றுப்பார்ப்பதைக் கண்டு வாயை மூடினார்.

எல்லோரும் உணவு முடித்து வெளியில் கைகழுவ வந்தனர்.

அவர்கள் பார்வையில் முதலில் பட்டது வாசலில் சுருண்டு படுத்திருந்த நாய்.

"இஞ்சை பார் இந்த நாய் இப்பவும் இதிலை கிடக்கு அடிச்சுக் கலையடா தம்பி" என்றார் மீசை நபர்.

இறந்தவரின் மகன் ஓடிவந்தான். பரிதாபமாக நாயைப் பார்த்தான்.

"அப்பா செத்த நாளிலிருந்து இது இதிலேயே படுத்திருக்கு ஒண்டுமே சாப்பிடுதில்லை குடுத்தாலும் தின்னுதில்லை" என்று கண்கலங்கச் சொன்னான்.

வயிறு நிறையச் சாப்பிட்டவர்கள் ஒரு கணம் நாயையே பார்த்தனர். அதைக்கொண்டுபோய் மரத்தடியிலை கட்டு" என்றார் ஒருவர். வேறுவழியின்றி இறந்தவரின் மகன் நாயைப்பிடித்து இழுத்தான் நாயின் தலை சரிந்தது, எசமானின் நினைவாகவே நாய் சிவனை விட்டது.

இந்த நாடகத்தை அமைதியாகக் கவனித்துக்கொண்டிருந்த இறந்தவரின் ஆசிரிய நண்பர்,

"நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே" [illegible] றார். இருமுலர் நாங்கள் நினைப்பை வழித்துவிட்டோ[illegible] நாயினைக் முடியவில்லை" என்றார்.

அமர்ணா

★ எச்சரிக்கைகளையும் மீறி

# காஷ்மீர் எல்லையை நோக்கி பேரணி புறப்பட்டு வருகிறது

நாளை இந்திய பாகிஸ்தான் எல்லையைக் கடக்கத் திட்டமிட்டுள்ள ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி இயக்கத்தினரின் முயற்சியை பாகிஸ்தான் அமைதியாக ஆனால் உறுதியாக தடுக்கும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்தார்,

ஆனால் இதேவேளை பாகிஸ்தான் ராவல் பிண்டி நகரிலிருந்து காஷ்மீர் நோக்கி பேரணி ஒன்று வந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த எல்லை கடக்கும் முயற்சியில் 50,000 பேர் பங்கு பற்றலாம் என ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி கருதுகிறது.

இதனிடையே எல்லையில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் இதை மீறி வந்தால் இந்திய இராணுவம் தொடர் துப்பாக்கிச் சூடு நடத்தும் எனவும் காஷ்மீர் ஆளுநர் சக்சேன எச்சரித்துள்ளார்.

இதேபோன்று இந்தியப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரும் எச்சரிக்கைகளை தற்போது விடுத்து வருகின்றனர்.

## காஷ்மீர் விவகாரம் ஜனதாதள் தி.மு.க ஆதரவு

காஷ்மீர் தொடர்பாக எழுந்துள்ள நிலைமையை ஆராய இன்று மத்திய அரசு கூட்டியிருக்கும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ஜனதா தளம் ஆதரிப்பதாக அக்கட்சியின் தலைவர் எஸ் ஆர் பொம்மை கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை காஷ்மீர் விவகாரத்தில் மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிப்பதாக மு கருணாநிதி அறிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் பிரசாரத்தை முறியடிக்க இந்தியா நடவடிக்கை

இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானின் பிரசாரத்தை முறியடிக்க சக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்களை இந்தியா நிறுவுகிறதாகத் தெரிவிக்கப்படுகிறது

காஷ்மீர் எல்லையைத் தாண்டி இந்தியாவுக்குள் பிரவேசிக்க ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி வந்துகொண்டிருக்கும்போது பாகிஸ்தானின் பிரசாரத்தை முறியடிக்க இந்திய பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் அதி உயர் சக்திவாய்ந்த ட்ரான்ஸ்மீற்றர்களை நிறுவுவதென்று இந்திய அரசு முடிவெடுத்திருக்கிறது.

இதன்படி முதலாவது ட்ரான்ஸ்மீற்றர் இராஜஸ்தான் மாநிலத்தில் ஆளுநர் சென்னாரெட்டியினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது.

## புங்குடுதீவு பாடசாலைகள் நகரில் காலையில் இயங்குகின்றன

அண்மைக்காலத்தில் தீவுப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் மாலைநேர வகுப்புக்களாக நடாத்தப்பட்டு வந்த புங்குடுதீவுப்பாடசாலைகள் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்லூரியான ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரியில் காலை நேர வகுப்புக்களாக நடத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டு6 தொடக்கம் ஆண்டு 11வரை கல்விகற்கும் சகல மாணவர்களையும் வகுப்புக்களுக்கு வருகை தருமாறும், தீவுப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மாணவர்களும் இதில் அனுமதிக்கப்படுவார்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயமும், கமலாம்பிகை கனிஷ்ட வித்தியாலயமும் இணைந்தே இவ் ஒழுங்குகளைச் செய்துள்ளன. 20

### போரை...

தத்தை ஆதரிக்கட்டும் என கண்டியைச் சேர்ந்த எம்.ஏ கே. பெரேரா என்பவர் கொழும்பு பத்திரிகைகளுக்கு ஆட்சேபக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

யுத்தத்தை விரும்பும் பலர் வரியாக ஒரு சதம் கூட அதிகமாகச் செலுத்த விரும்பவில்லை

வரியைச் செலுத்த முடியாத சாதாரண மக்கள் போரை விரும்பவில்லை அரசியல் தீர்வையே விரும்புகின்றனர் என அவர் அதில் குறிப்பிடுள்ளார். 18

### நொச்சிமோட்டை—

ளரகிய நிலையில் மரணமானார்.

குருநகர் 4-ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த வீ ஏ யேசுதாஸ் (52) என்பவரே மரணமானவராவர். 07

### கொழும்பில்...

அலுவலகத்தில் இக்கொடி பறந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான விஜேதுங்க சபையில இல்லாததால இதற்கு பதிலளிக்க அவகாசம் கேட்கப்பட்டது. 18

### நாடுகடத்தல்...

அதே மாதிரி இலங்கையும் தனது சட்டத்தை வெளியிட்டதாம்

இதன்படி பிரபாகரனைப் பிடிக்க முடியுமா என ஆராயும் அதிகாரிகள் இன்னொரு வழியையும் நம்புகிறார்களாம் 1982 இல் பொதுநல அமைப்பு நாடுகளிடையே கையெழுத்தான நாடுகடத்தல் ஒப்பந்தத்தில் இருநாடுகளும் ஒப்பமிட்டுள்ளனவாம்

இந்த ஒப்பந்தம் தங்களுக்கு உதவுமா என்று இவர்கள் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்களாம்.

### வடபகுதி...

புலிகளிடம் அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகள் உள்ளபோதிலும் ஸ்ரீலங்கா அரசு எந்தத் திட்டத்தையும் தம்வசம் வைத்திருக்கவில்லை எனத் தெரிகிறது எனக்குறிப்பிடும் மொறின், இராணுவ நடவடிக்கை ஒன்று யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்டால் அது நாடு முழுவதும் ஓர் ஆபத்தான போரை சந்திக்கும் அபாயத்தை ஏற்படுத்தலாம் என எச்சரித்துள்ளார்

இதன் பின்னர் சமாதான முயற்சிகள் என்ற பேச்சே எழுப்பப்படாமல் போகலாம் என அவர் மேலும் குறிப்பிட்டார்

## மலையகத் தமிழர் ஆதரவு பெற காமினி திஸநாயக்கா முயற்சி

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா மலையகத்தில் தமது நுவரேலியா தொகுதியில் தமிழ் மக்களின் ஆதரவைப்பெற பிரசாரம் செய்துவருகிறார்.

தான் பெருந்தோட்டத்துறை அமைச்சராக இருந்தபோது இன ஐக்கியத்தை உருவாக்க கொத்தணி முறையை கொண்டு வந்ததாகவும், ஆனால் தற்போது அது கைவிடப்பட்டதாகவும் கூறிவருகிறார். மலையகம் இன்று நிச்சயமற்ற தன்மைக்கும் குழப்பநிலைக்கும் உள்ளாகியுள்ளது

மலையகத்தில் பணிபுரியும் பொலிஸார் ஒன்றுமே செய்ய முடியாதுள்ளனர் எனவும் அவர் கூறினார் 18

## கூட்டுறவுச் சங்கங்கள் சுயமாக இயங்க புதிய சட்டம்

அரசியல் வாதிகளுக்கு கூட்டுறவு இயக்கத்தில இடம் வழங்குவதைத் தடுக்கக் கூடிய வகையில் கூட்டுறவுச் சட்டங்களுக்கான சில திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன

இத் திருத்தச் சட்டமூலத்தைச் சமர்ப்பித்துப் பேசிய உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் கூட்டுறவுச் சங்கங்கள் சுயமாகஇயங்க இச்சட்டம் வழிவகுக்கும் எனத் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வர்த்தக வரியிலிருந்து விதிவிலக்களிக்கப்பட வேண்டும் என ஐ. தே. க. எம். பி கலப்பதி கேட்டுக்கொண்டார்

## சார்ள்ஸ் டில்லி வருகிறார்

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ், இளவரசி டயனா இருவரும் இன்று புதுடில்லி வருகிறார்கள். இவர்கள் இந்தியத் தலைவர்களுடன் நட்புறவு ரீதியான பேச்சு வார்த்தைகள் நடத்துவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### தம்மைத்தாமே...

அடைந்த பின்னர் கூட தமிழ் மக்கள் சம அந்தஸ்துள்ள பிரஜைகளாக நடத்தப்படவில்லை என அவர்கள் காரணம் கூறுகின்றனர்,

மாகாணசபை மிகவும் சக்தி வாய்ந்த அரசியல் பிரிவாக வேண்டும் ஒரு மாகாண மக்களுக்கு தம்மைத்தாமே ஆளும் உரிமை அது வழங்க வேண்டும்.

பாதுகாப்பு வெளியுறவுக் கொள்கை, நிதி, வெளிநாட்டு உதவி ஆகியவற்றுக்கு மத்திய அரசின் அதிகாரம் கட்டுப்படுத்தப்படவேண்டும்

விமான நிலையங்கள் முக்கியமான துறைமுகங்கள் பாதுகாப்பு நிலையங்கள் போன்ற விசேட விடயங்களும் இதில் அடங்கும். 18

### ஆனைக்கோட்டை...

விருந்துபசாரம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்புகையிலேயே கொல்லப்பட்டுள்ளார்.

இவரை மோதிய அந்த லொறியின் சாரதி லொறியை விட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடிய போதிலும் பின்னர் காவற்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

## 20 ஆயிரம் ரூபா அபராதம்

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ரவி, வரதன் என்போர் பற்றிய தகவல்களை பொலிஸாருக்கு தெரிவிக்க மறுத்த குற்றச்சாட்டின் பேரில் நடராசா சண்முகதாசனுக்கு 20 ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறையும் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எவ் என் டீ, ஜெயசூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

## திருட்டு முயற்சி முறியடிப்பு

உருப்பராய் இந்துக் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இரவு விஞ்ஞான ஆய்வுகூடம் புத்தகக் களஞ்சிய அறை என்பன உடைத்து திருட முயன்ற முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் காவலாளியின் முயற்சியால் இத்திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 06

## யெல்சினுக்கு எதிராக மீண்டும் ரஷ்யாவில் பேரணி

ரஷ்ய ஜனாதிபதி யெல்சின் பதவி விலகுமாறு கோரி நேற்றும் மொஸ்கோவில் பெரும் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 40,000 பேர் கலந்துகொண்டனர். இவர்கள் முன்னாள் சோவியத் செஞ்சிலுவைக் கொடியை தாங்கியிருந்தனர்.

முன்னரும் ஒரு தடவை இவ்வாறு யெல்சினுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் மொஸ்கோவில் நடைபெற்றது தெரிந்ததே

இதேவேளை யெல்சினுக்கு ஆதரவு தெரிவித்து 10,000 பேர் ரஷ்ய பாராளுமன்றத்துக்கு முன் பேரணியை நடத்தினர்.

## பூஸாவிலிருந்து விடுதலையானோர் கொள்ளைக்குற்றத்தில் கைது!

ஹொரணைப் பகுதியில் கொள்ளைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அறுவர் கொண்ட கோஷ்டியொன்று கைது செய்யப்பட்டுள்ளது

கைதான அறுவரில் இருவர் ஜே.வி.பி இயக்க உறுப்பினர்கள் எனவும் அவர்கள் அண்மையில் தான் பூஸாவிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களெனவும் தெரிவிக்கப்பட்டது.

## தபாற் கந்தோர்களில் தந்தி அனுப்ப 'பாக்ஸ்' முறை

தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் தந்திகளை அனுப்புவதற்கு பாக்ஸ (FAX) யந்திரத்தை பிரதம தபாற்கந்தோர்களில் பயன்படுத்த தபால் தந்தி தொடர்புகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்மூலம் குறுகிய நேரத்தில் துரிதமாகத் தந்திகளை அனுப்ப முடியுமென தபாற் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (18)

## வேலணை பிரதேச சபைக்கு குடிநீர் பவுசர் கிடைக்கும்?

வடக்கு கிழக்கு மாகாண சபை குடி நீர் விநியோகம் செய்வதற்கென சுமார் ஏழரை லட்சம் ரூபா செலவிலான 6000 லீற்றர் கொள்கலனைக் கொண்ட பவுசர் ஒன்றை வேலணை பிரதேச சபைக்கு வழங்கியுள்ளது.

இந்த பவுசர் கொழும்பில் தற்போது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 19

### இரணவில...

யான போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

தென்னை மரங்களில் வெள்ளை நிறச் சிலுவைகளை அறைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த முயலுமானால் தாம் தம்மைத் தாமே சிலுவையில் அறைய ஆயத்தமாக இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்

இராணுவம், பொலிஸ், புல்டோசர்கள் வந்தாலும் நாம் மசிந்து கொடுக்கப்போவதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (18)

### ஓட்டோ...

பொது மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பத்மலிங்கம் ஜெயசீலன் (16), நாகமணி நவநீதன் (20), சின்னத்துரை தங்கராசா (30) ஆகிய மூவரும் படுகாயமுற்றவர்களாவர்,

இம்மாதத்தில் வாகன விபத்தில் 15க்கு மேற்பட்டோர் காயப்பட்டு யாழ் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். 07

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தின ... கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் ... அச்சக ... 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.